பக்கங்கள்:08 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 26 திங்கட்கிழமை 11.07.2022 கதிர் 248

இனி இது ரகசியம் அல்ல!

நவீன தொழில்நுட்ப யுகத்தில், தொடர்பாடல் துறையில், செய்திகள் வேகமாகப் பரவுகின்ற அதே சமயத்தில், அவற்றைவிட இரண்டு மடங்கு வேகமாக இரட்டை இறக்கை கட்டி பறப்பவை வதந்திகள்.

அப்படி ஒரு ☞2

## 13ஆம் திகதி கோட்டா விலகாவிட்டால் அறிவித்தல் இன்றி பூரண ஹர்த்தால்!

### தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் எச்சரிக்கை

எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகாவிட்டால், அறிவித்தல் இன்றி வேலைநிறுத்தம் மற்றும் முழுக் கடையடைப்பில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கொழும்பு - கோட்டையிலுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் காரியாலயத்தில் ☞2

## கொழும்பில் நேற்று முக்கிய பேச்சுக்கள்



### 'சூம்' வழியாகவும் நேரடியாகவும்

(ந.லோகதயாளன்)

சர்வகட்சி ஆட்சி அமைப்பது தொடர்பில் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் நேற்று பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் தற்போதைய சூழலில் கோட்டா - ரணில் அரசை நீக்கி சர்வகட்சி ஆட்சி அமைப்பது தொடர்பில் ☞2

## விமல் மீது தாக்குதல் முயற்சி!



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ மீது இன்று தாக்குதல் நடத்துவதற்கு நபர் ஒருவர் முற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் 9 ☞2

# ஏழைகளின் அழுகுரலை புறக்கணிக்க வேண்டாம்

## இலங்கை அரசிடம் பாப்பரசர் கோரிக்கை

**இலங்கையில் ஏழைகளின் அழுகுரலைப் புறக்கணிக்க வேண்டாம் என்று அதிகாரம் உள்ளவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.**

**- இவ்வாறு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.** ☞2



## ஆட்சி ஒழுங்கை உடன் சீர்செய்க!

### இலங்கையிடம் வெளிநாடுகள் வலியுறுத்து



இலங்கையில் கூடிய விரைவில் ஆட்சி ஒழுங்கைச் சீர்செய்யுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய ☞2

## இராணுவத் தலைமையகத்துக்குள் கோட்டா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது இராணுவத் தலைமையகத்துக்குள் உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அரசின் உயர்மட்டத்தைக் கோடிட்டு வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகங்கள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக போராட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றிய பின்னர், தாம் எதிர்வரும் 13ஆம் திகதியன்று பதவி விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கையில் நெருக்கடி நிலைமை மோசமடைந்ததையடுத்து, தாம் பதவி விலகத் தயாராக இருக்கின்றார் என்று பிரதமர் ரணில் அறிவித்திருந்தார்.



## தேவைப்பட்டால் ராஜபக்ஷக்களுக்கு இராணுவ உதவிகளை வழங்கலாம்

### இப்படி இந்தியாவிடம் கோரியுள்ளார் சுப்பிரமணியன் சுவாமி



இலங்கையில் ராஜபக்ஷக்களுக்குத் தேவைப்பட்டால் இராணுவ உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ இருவரும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஜனநாயக முறையில் தேர்தல் ☞2

## தமிழ் எம்.பிக்கள் ஒன்றுகூடி தக்க தீர்வை முன்வையுங்கள்

### ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

சகல தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்று கூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் நாம் எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன்வாருங்கள்.

- இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தின் தலைவர் கலாநிதி ☞2



## யார் இந்த யாப்பா?



ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பதவி விலகிய பின்னர், புதிய நியமனங்கள் இடம்பெறும் வரை சபாநாயகரே இடைக்கால ஜனாதிபதியாகச் செயற்படுவார். அந்த வகையில் கோட்டா - ரணில் இராஜிநாமா செய்த பின்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்பார். ☞2

## இன்று விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று விசேட கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து இன்று கலந்துரையாடப்படும் என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வதந்திதான் இலங்கையின் அடுத்த பிரதமராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வரக் கூடும் என்ற தகவல்.

எல்லாத் தரப்பினருடனும் ஊடாடி, அனைவரையும் அரவணைத்து, நீதியாகச் செயற்படக் கூடியவர் சுமந்திரன் என்று கருதும் தென்னிலங்கை தரப்புக்கள் சில, அதனடிப்படையில், இன்றைய நிலையில் அவர் பிரதமராக வேண்டும் என்பதை சமூக ஊடகங்கள் வாயிலாகத் தங்கள் கருத்தாக வெளிப்படுத்தி வருகின்றனர். அது உண்மைதான். ஆனால், அதற்கு அப்பால் தென்னிலங்கையின் எதிர்கால அரசியல் தொடர்பாக இப்போது கொழும்பில் நடைபெறும் எந்தப் பேச்சிலும் சுமந்திரனை பிரதமராக்கும் விவகாரமே தொடப்படவில்லை. அப்படி எவருக்கும் அங்கு எண்ணம் இருப்பதாகவும் இல்லை.

ஆனால், தமிழர் தரப்பில் ஓர் அரசியல்வாதி நேற்று நடைபெற்ற 'சூம்' செயலி மூலமான – புலம்பெயர் தரப்புகளும் பங்குபற்றிய ஒரு கூட்டத்தில், சுமந்திரன் பிரதமராகும் வாய்ப்புகள் இருப்பது பற்றி சாதுவாகப் 'போட்டுக் கொடுத்திருக்கிறார்' என அறிய அறிய வந்தது. அதன் நோக்கம் சுமந்திரன் பிரதமராகி விட வேண்டும் என்பது அல்ல, மாறாக, அவர் பிரதமராக வாய்ப்பு உண்டு, அதற்கு நேரத்துடனேயே தடுப்பு போடத் தயாராகுங்கள் என்று புலம்பெயர் உட்பட சில தரப்புகளை தட்டி விடுவதுதான்.

எது,எப்படி என்றாலும் சுமந்திரன் பிரதமராவர் என்று பேச்சுக்கே தெற்கில் இடமில்லை. ஆனால் அடுத்த ஜனாதிபதி, பிரதமர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் சுமந்திரனின் கருத்து நிலைப்பாடு ஆழமாகத் தாக்கம் செலுத்தும் என்பது உண்மை. அதுதான் நிலைவரம்.

நேற்று ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதனோடு சேர்ந்த தரப்புகள் தலதா அத்துக்கோறளையின் வீட்டில் கூடி ஆராய்ந்த சமயம் தங்களுக்கு 114 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருக்கிறது. அப்படியானால் அந்த 114 பேரின் ஆதரவோடு அரசமைக்க இடமளிக்கக் கோரும் கடிதத்தைத் தாமதமின்றித் தயார் செய்து 114 பேரினதும் ஒப்பங்களைப் பெறுங்கள் என்றார் சுமந்திரன். அப்படியானால் கூட்டமைப்பின் நிலைமை என்ன என்று சுமந்திரனிடம் அங்குள்ளோரால் கேட்கப்பட்டது.

"கூட்டமைப்பு இல்லாமல் நீங்கள் ஆட்சி அமைக்க முடியும் என்றால் அதைச் செய்யுங்கள். இல்லை, எங்களின் (கூட்டமைப்பின்) ஆதரவு தேவை என்ற நிலைமை இருந்தால், அதன் பின்னர் வாருங்கள், எங்கள் நிபந்தனைகள் பற்றி பேசி முடிவெடுப்போம்" – என கூறிவிட்டு சுமந்திரன் அங்கு இருந்து புறப்பட்டார். அச்சமயம் அங்கு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இருந்தார்.

ஆனால், மாலையில் நிலைமை மாறிவிட்டது. காலையில் 114 எம்.பிக்களின் ஆதரவு தங்களுக்கு உண்டு என்று பட்டியலிட்ட ஐக்கிய மக்கள் கட்சியினர், பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) டலஸ் அழகப்பெருமா தலைமையில் 31 எம்.பிக்கள் தங்கள் பக்கம் என்றனர். ஆனால் நேற்று மாலையில் தங்களுடைய ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும என்று பொதுஜன பெரமன அறிவித்துள்ளது.

ஆக, கோட்டாபய ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் தத்தமது பதவிகளை ராஜினாமாச் செய்தால், தற்போதைய நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்தன தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்கலாம். ஆனால் எஞ்சிய இரண்டரை வருட காலத்துக்கு அவரை ஜனாதிபதிப் பதவியில் தொடர அனுமதிக்கு எண்ணம் அவரின் பொதுஜனப் பெரமுனவுக்கு இல்லை. அவர்கள் டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதியாக்கவே விரும்புகின்றனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேயவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரில் ஒருவர் ஜனாதிபதி, மற்றவர் பிரதமர் என கருத்து நிலைப்பாட்டை ஐக்கிய மக்கள் சக்தி வெளிப்படுத்துகின்றது

விமல் வீரவன்ஸ போன்றோர் சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும ஆகிய இருவரில் ஒருவர் ஜனாதிபதி, மற்றவர் பிரதமர் என்று வலியுறுத்துகின்றனர். சபாநாயகரை அவர்களுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

இந்தக் குளறுபடியான தென்னிலங்கை அரசியலைப் பொறுத்திருந்து பார்த்து, ஆறுதலாக காய் நகர்த்தும் தந்திரோபாயத்தைத்தான் தமிழ்க் கூட்டமைப்பு பின்பற்றப் போகின்றது எனத் தெரிகின்றது.

ஆனால் இப்போது தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு இடையே காணப்படும் ஐக்கியமின்மையும், ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர முடியாத பிளவுப் போக்கும் ரணில் – கோட்டா ராஜினாமாவை பதிமூன்றாம் திகதியைத் தாண்டி, தள்ளிப் போடத் தூண்ட கூடும் என்ற நிலைமையும் உண்டு . உங்களுக்குள் மாற்று ஒழுங்குக்கான இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வாருங்கள் நாங்கள் ராஜினாமாச் செய்து அதிகாரத்தை கையளிக்கலாம் என்று ரணில் – கோட்டா கூட்டுத் தரப்பு கதை சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

– மின்னல் –

---

## ஆட்சி ஒழுங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஒன்றியமும் இலங்கையின்
முன்னேற்றங்களைத் தொடர்ந்து அவதானித்து வருகின்றோம் என்று தெரிவித்துள்ளது. ஜனநாயக ரீதியானதும் அமைதியானதுமான ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைக்குமாறு சகல தரப்புகளையும் அது கேட்டிருக்கின்றது.

நாட்டில் அடுத்த சில நாட்கள் நீடிக்க இருக்கும் அதிகார வெற்றிட நிலைமை குறித்து இந்தியாவும் மேற்கு நாடுகளும் தீவிர கவனம் செலுத்தி வருவது தெரிகின்றது.

அதேவேளை, கொழும்பில் பெரும் மக்கள் கிளர்ச்சியை அடுத்து ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகுவதாகக் கூறி ஒதுங்கியிருக்கின்றனர். இதனால் அங்கு நிலவும் அதிகார வெற்றிடம் குறித்து இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

---

## விமல் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சுயாதீனக் கட்சிகளின் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்கு விமல் வீரவன்ஸ எம்.பி. சென்றிருந்தார்.

அதன்பின்னர் பெலவத்தைப் பகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க விமல் முற்பட்டார்.

இதன்போது நபர் ஒருவர் விமலைத் தாக்க முற்பட்டார். விமலின் பாதுகாப்புத் தரப்பினர் அவரைத் தடுத்து நிறுத்தினர். பின்னர் அங்கிருந்து விமல் வீரவன்ஸ வெளியேறினார்.

---

## 13ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நேற்றுமுன்தினம் மாலை சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து, எதிர்வரும் 13ஆம் திகதி தனது பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதியால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## தமிழ் எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆறு. திருமுருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

வடக்கு – கிழக்கு, மலையகம், தெற்கு தமிழ் நாடாளுமன்ற அக்கத்தவர்கள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்றுகூட வேண்டிய தருணம் இது. எனவே அறிவுபூர்வமாகத் தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள். இது காலத்தின் கட்டாயம்.

இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்களானால் அது மாபெரும்வரலாற்றுத்தவறாகும். எங்களுக்குள் பலவாய் பிரிந்து வெறுங்கையோடு நின்ற வரலாற்றை மாற்றி, பொருத்தமான தீர்மானங்களை எடுக்க ஆயத்தமாகுங்கள்.

ஆட்சியைத் தீர்மானிக்கப் போகும் எவருடனும் பெறுமதியான தீர்மானத்தை முன்வைப்பதற்கு ஒன்று கூடுங்கள். உங்களை மக்கள் மிக அவதானத்தோடு காத்திருக்கின்றார்கள்.

இன்று ஒன்றுபடாவிடில் என்றும் உங்களால் பயன் கிட்டுவது எளிதல்ல.

தமிழ் மக்கள் சார்பில் எந்த அரசியலும் இல்லாத பொது மகனாக இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன் – என்றுள்ளது.

---

## யார் இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதன்பின்னர் இடைக்கால சர்வ கட்சியை உடன் அமைத்து 30 நாட்களுக்கிடையில் நாடாளுமன்றம் பதில் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்று சபாநாயகர் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள மஹிந்த யாப்பா அபேவர்தன, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்று, முகாமைத்துவம் தொடர்பில் இந்தியாவிலும் கல்வி கற்றுள்ளார்.

அவரின் அரசியல் வரலாற்றைப் பின்வருமாறு மீட்டுப் பார்க்க முடியும்.

1983 இல் நடைபெற்ற இடைக்கால தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தின் – ஹக்மன தொகுதியில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடி, நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

1987 இல் ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சியில் முன்வைக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை (13ஆவது திருத்தச் சட்டம்) கடுமையாக எதிர்த்தார். அதற்கு எதிராக வாக்களித்தார். இதனால் கட்சிக்குள் அவருக்கு கடும் எதிர்ப்பு வலுத்தது. எம்.பி. பதவியையும் இழக்க நேரிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து காமினி திஸாநாயக்க , லலித் அத்துலத்முதலி உள்ளிட்டவர்கள் வெளியேறி, உருவாக்கிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் பிற்காலத்தில் இணைந்து கொண்டார்.

1993 இல் தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அவர், மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவரானார். பின்னர் முதலமைச்சர் பதவியையும் வகித்தார். 2001 ஆம் ஆண்டுவரை மாகாண அரசியல் பயணம் நீடித்தது.

2001 பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றதுக்குத் தெரிவானார்.

2004 இல் சந்திரிகா ஆட்சியில் பிரதி அமைச்சரானார். அதன்பின்னர் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்பட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உயர் பதவிகளையும் வகித்தார்.

2010 இல் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று, மஹிந்த ஆட்சியில் விவசாய அமைச்சராகச் செயற்பட்டார்.

2015 இல் பொதுத்தேர்தலிலும் வெற்றிபெற்றார். எதிரணியில் செயற்பட்டார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணைந்தார்.

2020 இல் பொதுத்தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் தெரிவான அவர், சபாநாயகராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இன்றளவிலும் அப்பதவியில் நீடிக்கின்றார்.

---

## கொழும்பில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இவ்வாறு இடம்பெற்ற பேச்சுக்களின் போது கோட்டா – ரணில் அரசு மக்களின் கோரிக்கைக்கமைய பதவி விலகி மாற்று அரசை அமைக்க அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் தலைவர்களிடம் சஜித் பிரேமதாஸ கோரினார் எனத் தெரியவருகின்றது.

இதேநேரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக மறுத்தாலும் 113 பேரின் ஆதரவுடன் இருப்பவர் பிரதமராக முடியும் என்பதன் அடிப்படையிலும் ஆதரவு தேடல் முயற்சி இடம்பெற்றது.

இந்த முயற்சி 'சூம்' வழியாகவும் பின்னர் நேரடியாகவும் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட கட்சிகளில் சில ஆதரவைத் தெரிவித்தபோதும் இரு கட்சிகள் நிபந்தனைகளை மட்டுமே தெரிவித்தன எனவும் அறியமுடிகின்றது.

---

## ஏழைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் ருவிட்டர் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும் இலங்கை மக்களின் துக்கத்தில் என்னை இணைத்துக்கொள்கின்றேன். நாட்டின் ஆயர்களுடன் சேர்ந்து, அமைதிக்கான எனது வேண்டுகோளை நான் புதுப்பிக்கின்றேன். ஏழைகளின் அழுகுரலைப் புறக்கணிக்க வேண்டாம் என்று அதிகாரம் உள்ளவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன் – என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## தேவைப்பட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஊடாகத் தெரிவானவர்கள். அவ்வாறு இருக்க அவர்களின் ஆட்சியை எவ்வாறு ஒரு கும்பலால் கவிழ்க்க முடியும்?

அப்படி நடக்குமானால் நமது சுற்றுப்புறத்தில் எந்தவொரு நாடும் பாதுகாப்பாக இருக்க முடியாது – என்றுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழருக்குப் பயன் என்ன?

**அரசியலே தெரியாத ஒருவரை –**

**முன்பின் ஊரில் சங்கக்கடைத் தேர்தலில் கூட போட்டியிட்ட அனுபவம் இல்லாத ஒருவரை –**

**தனது சகோதரர் என்பதற்காகத் தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக்கிய பெருங்குற்றத்தை – தவறை – இழைத்தமைக்கு இப்போது மனதுக்குள் தம்மை தாமே நொந்து வேதனைப்படுவார் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ என்பது நிச்சயம்.**

**கோட்டாபய ராஜபக்ஷ என்ற சகோதரரை ஜனாதிபதியாக்கி நாட்டுக்கு வரலாற்றுத் தவறிழைத்த குற்றத்திற்காக அவர்களது ராஜபக்ஷ குடும்பமே இனி இலங்கையின் அரசியல் பக்கமே தலைகாட்ட முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பது பரிதாபத்துக்குரியது.**

**வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை இனவாதப் போக்கில் – ஈவு இரக்கமின்றி – நடத்தியவர் கோட்டாபய ராஜபக்ஷ.**

**அந்தத் தகுதி ஒன்றை வைத்தே தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்களிடம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளை வாங்கிக் குவித்தார். அமோக வெற்றியும் ஈட்டினார்.**

**தமிழர்களுக்கு எதிராக கோட்டாபய ஈட்டிய யுத்த வெற்றி நியாயத்தின் பாற்பட்டதல்ல. தர்மத்துக்கு அமைவானதுமல்ல. யுத்தக் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும், மனித குல மாண்புகளுக்கு மாறான கொடூரங்களும் நிறைந்ததே அந்தக் குரூர வெற்றி.**

**ஆனால், பௌத்த – சிங்களப் பேரினவாதம் அல்லது இனவெறி இந்த விடயத்தில் நீதியின் கண்களை தென்னிலங்கை மக்களுக்கு அப்போது மறைத்து விட்டது.**

**அந்தத் தவறுக்கான பாவத்தை இன்று பொருளாதாரப் பேரழிவால், பின்னடைவாக முழு இலங்கை நாடுமே அனுபவிக்கின்றது.**

**தவறை – குற்றத்தை – உணர்ந்து, ஏற்று, அதிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கையை எடுத்தால்தான் பிராயச்சித்தம் கிடைக்கும். நியாயம் நிலை நாட்டப்பட்டு, நீதியும் தர்மமும் இலங்கை பக்கம் கருணை காட்டும்.**

**கோட்டாபய ராஜபக்ஷ அண்ட் கம்பனி கடந்த இரண்டரை ஆண்டுகளாகப் பண்ணிய சண்டப் பிரசண்டத்துக்காகச் சீறிக் கிளம்பியிருக்கும் தென்னிலங்கை, அதற்கு முன்னர் 2005இலிருந்து 2009 வரை நான்கு ஆண்டுகளில் அவர் பண்ணிய அழிச்சாட்டியம், அட்டூழியங்களுக்கு என்ன செய்யப் போகின்றது? தொடர்ந்தும் அவற்றை மூடி மறைக்கும் தனது பௌத்த, சிங்களப் பேரின வாதத்தைத்தான் தொடரப் போகின்றதா?**

**சரி. அந்த விடயத்தை சர்வதேச நீதிப் பொறிமுறை கையாளட்டும் என்று பாதிக்கப்பட்ட தமிழர்கள் எதிர்பார்ப்பதைப் போல கைவிட்டு, அந்தப் பொறிமுறைக்கு இனியாவது ஒத்துழைக்க சிங்களம் முன்வருமா?**

**தவிரவும், 2019 நவம்பர் தொடக்கம் நேற்று வரை கோட்டாபயவின் ஆட்சித் தலைமையில் நடந்த ஊழல்கள், முறைகேடுகள், மோசடிகள், நீதிச் சீரழிவு நடவடிக்கைகள் குறித்த விசாரிக்க வேண்டும் என விழையும் தென்னிலங்கை, இந்தக் காலகட்டத்தில் வடக்கு, கிழக்கில் – தமிழர் தாயகத்தில் – அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள், வழிபாட்டிடங்கள், நிலங்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயவும், விசாரிக்கவும், நியாயம் செய்யவும் கூட முன்வர வேண்டும்.**

**ஆனால், கோட்டாபயவின் ஆட்சியை வீழ்த்தும் தென்னிலங்கை எழுச்சியில் இத்தகைய ஒட்டுமொத்த நீதிக்கான குரல் இழையோடியிருப்பதாகத் தெரியவில்லை.**

**அதனால், தென்னிலங்கை ஆட்சிப்பீடத்தின் இந்த மாற்றம் குறித்து தமிழர்கள் அதிகம் அலட்டிக் கொள்ள இடமில்லை என்பதுதான் உண்மை.**

# இலங்கை நிலைமை தொடர்பாக உன்னிப்பாக அவதானிக்கிறோம்

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய வேலைத்திட்டம் தொடர்பான பேச்சை மீள ஆரம்பிக்க அனுமதித்தால் தற்போதைய நிலைமைக்கு தீர்வு காண முடியும் என நம்புவதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை –

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக பாதிக்கப்படக்கூடிய மக்கள், குறிப்பாக ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க, இந்த கடினமான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

இந்நிலையில், நிதியமைச்சகம் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் உள்ள தமது பிரதிநிதிகளுடன் தொழில்நுட்பக் கலந்துரையாடல்களை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக சர்வதேச நாயண நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

# மக்களின் எழுச்சிப் போராட்டம் உலக வரலாற்றில் திருப்புமுனை!

### முன்னிலை சோசலிசக் கட்சி பெருமிதம்



நாடாளுமன்றத்துக்கு வெளியில் மக்களின் அதிகாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பேரவை உருவாக்கப்பட வேண்டும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் முன்னிலை சோசலிசக் கட்சியின் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த மக்கள் பேரவை தேசிய மட்டத்தில் மாத்திரமின்றி பிரதேச மட்டத்திலும் பல பேரவைகள் உருவாக்கப்பட வேண்டும்.

நாட்டுக்குள் உடனடியாக அரசியல் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

புதிதாக யார் ஆட்சியமைத்தாலும் அவர்கள் போராட்டக்காரர்களுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

இந்த சந்தர்ப்பம் மக்கள் அரசமைப்புச் சட்டத்துக்கும் நடைமுறையில் உள்ள சட்டத்துக்கும் அப்பால் சென்று அமைதியான முறையில் தமது இறையாண்மை அதிகாரத்தை உறுதிப்படுத்திய சந்தர்ப்பம்.

2019 ஆம் ஆண்டு பல்வேறு அரசியல் சதித்திட்டங்கள் மூலம் 69 லட்சம் வாக்குகளை பெற்று பதவிக்கு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை மக்கள் விரட்டியுள்ளனர்.

மறுபுறம் அவருக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்தது. 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் முக்கியமான அரசியல் அதிகாரங்களை பெற்றிருந்தார்.

சர்வாதிகாரத்தை நோக்கியும் மிக மோசமான சமூக பொருளாதார நெருக்கடிக்கும் நாட்டை கொண்டு சென்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்க நாட்டு மக்கள் தமது பலத்தைப் பயன்படுத்திய சந்தர்ப்பம் இது.

இது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனை என்பது போலவே உலக வரலாற்றிலும் மிக முக்கியமான திருப்புமுனை எனவும் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

# கோட்டாபயவின் மகனின் வீட்டுக்கு எதிரில் அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதல்வர் மனோஜ் ராஜபக்ஷ, அமெரிக்காவில் வசித்து வரும் வீட்டுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாக பதவி விலகுமாறு அறிவிக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள இலங்கையர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி மாபெரும் மக்கள் போராட்டம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதி மாளிகையும் போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது. இவ்வாறான நிலைமையில், அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் புதல்வரின் வீட்டுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

# மீண்டும் நாடாளுமன்றுக்கு வரவுள்ளார் கருஜயசூரியா?



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை மீண்டும் நாடாளுமன்றம் வர வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைத் துறப்பதற்கு மயந்த திஸாநாயக்க தயாராகவே இருக்கின்றார் என்று தெரியவருகின்றது.

நவீன் திஸாநாயக்க, கரு ஜயசூரியவின் மருமகன். அவரின் தம்பியே மயந்த திஸாநாயக்க. இவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி. என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறந்தவுடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இடைக்கால ஜனாதிபதியாக வேண்டும், 30 நாள்களுக்கு முன்பாகவே நாடாளுமன்றம் பதில் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்று சனிக்கிழமை மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்; நீதி கிடைக்க செயற்பட வேண்டும்!

## வவுனியா ஊடக அமையம் வலியுறுத்து

இலங்கையில் நான்கு ஊடகவியலாளர்கள் மீது பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு நீதியான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என வவுனியா ஊடக அமையம் வலியுறுத்தியுள்ளது.

சக்தி மற்றும் சிரச ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா ஊடக அமையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மக்கள் தன்னெழுச்சியாக கோட்டா அரசாங்கத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் வீடு என்பன மக்களால் முற்றுகையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தின் போது ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் களத்தில் நின்று மக்களுக்கு உண்மை நிலையை வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது.

சக்தி, சிரச ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர் நால்வரும் தாம் ஊடகவியலாளர் என வெளிப்படுத்திய பின்னரும், பொலிஸாரும், விசேட அதிரடி படையினரும் இணைந்து காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

யுத்த காலத்திலும், யுத்தத்துக்குப் பின்னரும் இந்த நாட்டில் கருத்து சுதந்திரத்துக்கு இடமளிக்காது ஆட்சியாளர்கள், ஆயுத முனையில் அதனை அடக்கி ஆழ முற்பட்டு வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஊடக அடக்கு முறை என்பது தொடர்கின்றது என்பதை இந்தச் சம்பவம் படம் போட்டு காட்டுகின்றது.

தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் விரைவில் நலன்பெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஊடகவியலாளர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உடனடியாக நீதியான விசாரணைகள் இடம்பெற வேண்டும்.

மேலும், சம்பந்தப்பட்ட பாதுகாப்பு தரப்பினர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட நான்கு ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என வவுனியா ஊடக அமையம் வலியுறுத்துகிறது.

இலங்கையில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை, ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலும் நீதியான ஒரு விசாரணை இடம்பெற வேண்டும்.

சர்வதேச சமூகமும், ஒட்டு மொத்த ஊடக அமைப்புக்களும் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படும் இடத்தில் மட்டுமே இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்த முடியும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகிய ஊடக சுதந்திரமும் பாதுக்காக்கப்படும் என ஊடக அமையம் நம்புகின்றது. – என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மாளிகைத் தோட்டத்தில் வெற்றிக்கொண்டாட்ட விருந்துபசாரம்!

போராட்டத்தின் மூலம் கோட்டாபய ராஜபக்ஷ, வெளியேற்றப்பட்ட பின்னர், சனிக்கிழமை இரவு, போராட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகையின் முன்வாயில் தோட்டத்தில் வெற்றிக்கொண்டாட்டத்தின் விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

முன்னதாக சனிக்கிழமை, ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை முற்றுகையிட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் தலைமையிலான போராட்டக்காரர்கள், பிற்பகல் 2 மணியளவில் மாளிகைக்குள் உள்நுழைந்தனர்.

பாதுகாப்பு தரப்பினரின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இரண்டு போராட்டக்காரர்கள், மாளிகைக்குள் பிரதான வாயிலின் ஊடாக ஏறினர்.

இதன்போது அங்கிருந்த பொலிஸார் தடுக்காத நிலையில், ஏனைய போராட்டக்காரர்களும் வாயிலில் ஏறி ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கணக்கானோரும் மாளிகைக்குள் புகுந்து பல்வேறு இடங்களுக்கும் சென்றனர். அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதன்போது சிறப்பு அதிரடிப்படை அதிகாரியும், ஓர் அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியும் செயலற்ற முறையில் இந்த சம்பவங்களை பார்த்துக் கொண்டிருந்தனர். பலர், மாளிகைத் தோட்டத்தில் மதிய உணவை பிரித்து சாப்பிட்டனர். சிறிது தூரத்தில், ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்திற்குள்ளும் பிரவேசித்தனர். மாலை தோட்டத்தில் வெற்றிக்கொண்டாட்ட விருந்துபசாரமும் நடைபெற்றது.

# மஹிந்த அமரவீரவும் அமைச்சு பதவி துறப்பு

விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தனது பதவிகளை இராஜினாமா செய்கிறேன் என அறிவித்துள்ளார்.

சனிக்கிழமை இலங்கைக்கு வந்த யூரியா உரத்தின் இருப்பை ஏற்றுக்கொண்ட அமைச்சர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை பதவி விலகினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சனிக்கிழமை காலை 40 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை ஏற்றிக்கொண்டு இந்திய கப்பல் ஒன்று இலங்கையை வந்தடைந்தது.

இது இந்திய கடன் உதவியின் கீழ் அந்த நாட்டுக்கு சொந்தமானது. இதேவேளை, நேற்றையதினம் அமைச்சர்களான பந்துல குணவர்தன, மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் மட்டக்களப்பில் பொலிஸாரினால் முற்றுகை!



மட்டக்களப்பில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு – குமாரபுரம் தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள புன்னைச்சோலை பகுதியில் இயங்கிவந்த சட்டவிரோத மதுபான விற்பனை நிலையத்தையே பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

பெண் வியாபாரி ஒருவரையே 126 கால் போத்தல் கொண்ட மதுபான போத்தல்களுடன் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளோம் எனமாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்துள்ளார்.

மாவட்ட குற்ற விசாரணை பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான சனிக்கிழமை இரவுமதுபான விற்பனை இடம்பெற்றதாக கூறப்படும் வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது மதுபான வியாபாரியான பெண் அங்கு மதுபான விற்பனையில் ஈடுபட்டு கொண்டிருந்த வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சங்கானைக் கிணற்றில் இருந்து வயோதிபப் பெண்ணின் சடலம்!

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி வீதி, சங்கானை பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சங்கானை பகுதியை சேர்ந்த கந்தையா அன்னம்மா (வயது 81) என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நரம்பு தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டவர் என்றும் 'நான் உங்களுக்கு தொந்தரவாக இருப்பதற்கு விரும்பவில்லை' என்றும் உறவினர்களுக்கு கூறினார் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலமானது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளைஞர்களையும் ஊடகவியலாளர்களையும் மட்டக்களப்பில் அச்சுறுத்திய மர்ம நபர்கள்!





மட்டக்களப்பில் இளைஞர்களையும் ஊடகவியலாளர்களையும் சில நபர்கள் அச்சுறுத்தினர் என விசனம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் வெடி கொளுத்தி கொண்டாத்தில் ஈடுபட்ட இளைஞர்களையே வெடி கொளுத்த வேண்டாம் என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் சென்று கொளுத்துமாறு இளைஞர்களை பிள்ளையான் கட்சியை சேர்ந்தவர்கள் கூறியுள்ளனர்.

ஊடகவியலாளர்களை வீடியோ எடுக்கக் கூடாது என அச்சுறுத்தியுள்ளதுடன் அவர்களையும், இளைஞர்களையும் வீடியோ படம் எடுத்தும் சென்றுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற் றுகையிட்டதையடுத்து அதற்கு ஆதரவு தெரிவித்தே மட்டக்களப்பு நகரத்தில் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இளைஞர்கள் வெடி கொளுத்தி வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகர பொலிஸ் தலைமையகத்தின் முன்னாள் உள்ள வீதியிலேயே இளைஞர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியை சேர்ந்த இருவர் அங்கு கார் ஒன்றில் வந்துள்ளனர்.

பின்னர் அவர்கள் அச்சுறுத்தி வீடியோ எடுத்து சென்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு முரணாகச் செயற்பட்டால் நிலைமை தீவிரமடையும் என்பதை கோட்டா புரியவேண்டும்!



## திஸ்ஸ விதாரண அறிவுரை

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவோ அல்லது மட்டுப்படுத்தவோ எவ்வித ஏற்பாடுகளும் 22 ஆவது திருத்தத்தில் உள்வாங்கப் படவில்லை.

மக்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாகச் செயற்பட்டால் தற்போதைய நெருக்கடி மேலும் தீவிரமடையும் என்பதை ஜனாதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள காரணத்தால் ஜனாதிபதி சிறந்த தரப்பினரது ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவில்லை. தவறான தீர்மானங்கள் முழு நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியாகத் தீவிரமடைந்துள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக ஒன்று திரண்டு மக்கள் முழு அரசியல் கட்டமைப்பையும் வெறுக்க ஆரம்பித்தார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தேவைக்காகவே அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட பஸில் ராஜபக்ஷ, அமெரிக்காவிற்கு சாதகமாகவே செயற்பட்டார். அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு,19 ஆவது திருத்தம் திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் அரசியலில் இருந்து முழுமையாக விலக வேண்டும் என்பது மக்களின் பிரதான வலியுறுத்தலாக அமைந்தது.

மக்களின் போராட்டம் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது. அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் இரத்து செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், ராஜபக்ஷர்களும் அரசியலில் இருந்து விலகியுள்ளார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுகின்றமை அரசமைப்பு ரீதியில் நெருக்கடியை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அந்த விடயம் தொடர்பாக ஆழமான முறையில் சிந்திக்கப்படுகிறது.

நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ள அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு அபிப்பிராயம் கிடையாது.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய 22 ஆவது திருத்த வரைவு தயாரிக்கப் படவில்லை. ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும், மட்டுப் படுத்தவும் எவ்வித ஏற்பாடுகளும் அதில் உள்வாங் கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக வெகு விரைவில் சிறந்த தீர்மானத்தை அறிவிப் போம். – என்றார்.

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் குற்றச்சாட்டு; அதிரடிப்படை அதிகாரிகள் மூவர் பதவி இடைநீக்கம்!

ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் மூன்று முக்கிய அதிகாரிகள் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரி ரொமேஷ் லியனகே உள்ளிட்ட ஏனைய மூன்று அதிகாரிகளுமே இவ்வாறு உடனடியாக பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் மா அதிபர் மேற்படி அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளேன என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரணிலின் இல்லம் தீ வைப்பு; சந்திரிகா கடும் கண்டனம்!

## சர்வதேசம் கவலை தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி 09ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கண்டனம் தெரிவித்துள்ளதோடு, நோர்வே மற்றும் ஆப்கானிஸ்தான் என்பன கவலை வெளியிட்டுள்ளன.

09 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கொழும்பு – 5 ஆம் வீதியில் அமைந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லவளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரத்தின் பின்னர் வீட்டின் மீது தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினர்.

இதனால் பிரதமரின் இல்ல வளாகத்தில் பொலிஸார் மற்றும் முப்படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்தோடு ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து கலைப்பதற்காகக் கண்ணீர்ப்புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறிருப்பினும் அங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்து செல்லவில்லை.

இதனையடுத்து பிரதமரின் இல்லத்துக்குத் தீமூட்டப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியதோடு, தீப்பற்றியெறியும் காணொலி பதிவுகளும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. இதன் போது பிரதமர் பிரத்தியேக இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த நூலகம் தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பிரதமரின் இல்லத்துக்கு தீ வைக்கப்பட்டமைக்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். காரணம், வீட்டினை பிரதமர் கொழும்பு ரோயல் கல்லூரிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமையினாலாகும். இது தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள சட்டத்தரணி என்.கே. அஷோக்பரன் – "ரணில் விக்கிரமசிங்க தனக்குப்பின்னர் தனது இல்லத்தை அரச பாடசாலையொன் றுக்கு வழங்கியிருக்கின்றார்.

"அதுமாத்திரமன்றி அந்த இல்லத்திற்குள் பெறுமதியான புத்தகங்களுடன்கூடிய நூலகம் இருப்பதை அவரது நேர்காணல் காணொலிகளில் கண்டிருக்கிறோம். அத்தகைய இல்லத்துக்குத் தீவைப்பதென்பது மிகமோசமான குற்றச்செயலாகும்". – என்று குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது டுவிட்டர் பதிவில் – "பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

"ஒரு மோசமான அரசாங்கத்தை விரட்டி, மக்கள் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான இலக்கை அடைய போராட்டக்காரர்களுக்கு வன்முறை தேவையில்லை". – என்று குறிப்பிட்டுள்ளார்.

'அறவழிப் போராட்டத்தில் பெற்றுக்கொண்ட வெற்றியை பின்னடையச் செய்யும் வகையிலான தீ வைப்பு, கொள்ளையிடுதல் போன்ற வன்முறை செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம்' என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் இல்லத்துக்குத் தீ வைக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேசமும் கவலை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான நோர்வே தூதுவர் தனது டுவிட்டர் பதிவில் –

"அமைதியான போராட்டங்கள் வன்முறையாக மாறி, பிரதமர் இல்லம் எரிக்கப்பட்டுள்ளமை கவலைக்குரியது. "எந்தச் சூழலிலும் வன்முறையை நியாயப்படுத்த முடியாது. வன்முறை விரிவடைவதைத் தடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம். போராட்டக்காரர்கள் சட்டத்தை தங்கள் கைகளில் எடுக்க வேண்டாம்". – என்று குறிப்பிட்டுள்ளார். "வன்முறை, பொது மற்றும் தனியார் சொத்துக்களை அழிப்பது நியாயமற்றது. இலங்கையில் இதுபோன்று பொது ஒழுங்கை மீறுவது நாட்டின் பிரச்சினைகளை ஆழமாக்குகிறது. இது உலகெங்கிலும் உள்ள பல நாடுகளை பாதிக்கிறது. தேசிய ஒற்றுமை மற்றும் சர்வதேச உதவி மூலம் மட்டுமே தீர்வுகள் கிடைக்கும்" என ஆப்கானிஸ்தான் தூதுவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## யாழ். நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 27 ஆம் ஆண்டு நினைவுதினம்

யாழ்ப்பாணம், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 27 ஆம் ஆண்டு நினைவுதினம் கடந்த சனிக்கிழமை மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூறப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகினர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல் ,விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர். அன்றையதினம் காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின. இந்தக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**சி.அ.யோதிலிங்கம்**
**இயக்குநர்,**
**சமூக விஞ்ஞான ஆய்வு மையம்**

# சர்வகட்சி அரசாங்கம்!

## தமிழ் மக்களுக்கு என்ன பயன்?

இலங்கைத் தீவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விக்டர் ஐவன் போன்ற சிங்கள சிவில் சமூகப்பிரமுகர்களின் ஆலோசனையுடனும், பங்களிப்புடனும் இவை மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த வாரம் இடம்பெற்ற முதலாவது கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுடன் தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவர் விக்கினேஸ்வரனும் பங்குபற்றியிருந் தார்.

இரண்டாவது கலந்துரையாடல் கடந்த 05 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதில் ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சுயாதீன நாடாளுமன்றக் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



என்பன பங்குபற்றியிருந்தன. இதில் பல்வேறு தரப்பினரது ஆலோசனைகளை ஒன்றிணைத்து ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரிஷெல்லவை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல்களில் தமிழ் மக்கள் சார்பில் பங்குபற்றிய விக்கினேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்தார்களா?

அவ்வாறாயின் எத்தகைய ஆலோசனைகளை முன்வைத்தார்கள் என்பது பற்றி எந்தத் தகவலும் இதுவரை வெளிவரவில்லை. இது பற்றி கட்சிகளுக்குள்ளேயோ கூட்டணிக்குள்ளேயோ எந்தவித கலந்துரையாடல்களும் இடம்பெற்றனவாகத் தெரியவில்லை. தற்போதைய நெருக்கடி என்பது பெரும்தேசியவாதத்தின் லிபரல் பிரிவு, பெரும்தேசியவாதத்தின் இனவாதப் பிரிவு, ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் குறிப்பாக தமிழ் மக்கள் புவிசார் அரசியல்காரரான இந்தியா, பூகோள அரசியல் காரர்களான அமெரிக்கா, சீனா என்பவற்றின் நலன்களுக்கிடையிலான மோதல்களால் ஏற்பட்டதாகும்.

நெருக்கடிக்கான தீர்வு என்பது சம்பந்தப்பட்ட ஐந்து தரப்பினரதும் நலன்கள் சந்திக்கின்ற புள்ளியாகும். எனவே இந்த நெருக்கடி மைதானத்தில் தமிழ் மக்களுக்கும் தவிர்க்கப்பட முடியாத கௌரவமான இடம் இருக்கின்றது. தமிழ் மக்களைப் புறக்கணித்துவிட்டு இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது என்பதே யதார்த்தமான உண்மையாகும். தமிழ் அரசியல் கட்சிகள் இந்த உண்மையை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, நெருக்கடித் தீர்வு முயற்சியில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கௌரவமாக முன்வைப்பதற்கு தமிழ்க் கட்சிகள் தயங்கக் கூடாது.

சர்வதேச நாணய நிதியம் கடும் நிபந்தனைகளை அரசாங்கத்தின் மீது விதித்துள்ளது. அதில் ஒன்று இராணுவத்தின் ஆளணியைக் குறைக்க வேண்டும் என்பதாகும். இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இராணுவத்தின் ஆளணியைக் குறைக்க முடியாது. தவிர, நாட்டின் ஸ்திரமான நிலையையும் சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது. அதற்கும் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வு நிபந்தனையாக உள்ளது.

அரசியல் தீர்வாக தற்போதுள்ள 13 ஆவது திருத்தத்தை திணிக்கும் முயற்சி இடம் பெறலாம். தமிழ் மக்கள் அதனை நிராகரிக்க வேண்டும். 13 ஆவது திருத்தம் அரசியல் தீர்விற்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்கப்போவதில்லை. ஒற்றையாட்சிக்குட்பட்ட சுயாதீனமில்லாத பொறிமுறையைக் கொண்ட 13 ஆவது திருத்தம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

தென்னிலங்கையில் செயற்படும் எதிர்க்கட்சிகளின் அணி ஏதோ ஒரு வகையில் தமிழ்த் தரப்பையும் சர்வகட்சி அரசாங்கச் செயற்பாட்டில் பங்குபற்றச் செய்யவே முயற்சிக்கின்றது. ஆனால் அவர்களின் பெரும்பான்மை வெற்றுக் காசோலையில் கையெழுத்துப் பெறவே விரும்புகின்றது. சிறிய பிரிவினர் தற்போதுள்ள 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிடுவதன் மூலம் நிலைமையை சமாளிக்க முயல்கின்றன.

தமிழ் மக்களின் தேச அங்கீகாரம்,



இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை அங்கீகாரம், சுயநிர்ணய சமஷ்டி என்பவற்றைப் பற்றிப் பேசுவதற்கு அவர்கள் இன்னமும் தயாராகவில்லை. சர்வதேச தரப்புகளும் வலுவான கோரிக்கைகளை முன்வைக்காமல் சிங்கள தரப்போடு இணைந்து செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. அண்மையில் சுவிற்ஸர்லாந்து அரசின் பேரில் அழைக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளிடமும் மறைமுகமாக இதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் தமிழ்ப் பிரதிநிதிகள் அதற்கு இணங்கவில்லை.

இன்று சிங்கள தரப்பும், சர்வதேச சக்திகளும் பெரும் பொறிக்குள் மாட்டுப்பட்டுள்ளனர். தமிழ் மக்களினதும் பங்களிப்பு இல்லாமல் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது என்பதே அந்தப் பொறிமுறை. இந்தச் சூழலை தமிழ்த் தரப்பு அவதானமாகக் கையாள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் அண்மைய காலத்துக்கு சந்தர்ப்பங்கள் வருவதற்கான சாத்தியங்கள் குறைவு.

எனவே சர்வகட்சி அரசாங்கம் முயற்சிகளின் போது தமிழ்த் தரப்பு தங்கள் பக்க கோரிக்கையை அழுத்தமாக முன்வைக்க வேண்டும். இது தொடர்பாக மூன்று வகையான செயல்திட்டங்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

தமிழ்த் தரப்பின் பங்களிப்பைப் பெறுவதற்கு சிங்களத்தரப்பு நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும். எனவே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள் பின்வரும் விடயங்க



ளுக்கு தீர்வு காணுதல் வேண்டும்.

அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் எந்தவித நிபந்தனையுமில்லாமல் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

நிலைமாறு கால நீதிக் கோட்பாட்டிற்கமைய காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தீர்க்கப்படல் வேண்டும். இது விடயத்தில் உண்மையைக் கண்டறிதல், நீதி வழங்குதல், இழப்பீடு வழங்குதல் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு கால அட்டவணை வகுத்தல் வேண்டும். இவர்களுக்கான இழப்பீடு தீர்மானிக்கப்படும் வரை தற்போதைய விலைவாசி உயர்வுக்கேற்ப மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். முன்னைய 6, 000 ரூபா எந்த வகையிலும் போதுமானதல்ல.

இராணுவம் கைப்பற்றியுள்ள காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும்.

2009 இற்குபின்னர் உருவாக்கப்பட்ட அனைத்து சிங்களக் குடியேற்றங்களும் அகற்றப்படல் வேண்டும்.

தொல்லியல் திணைக்களம், வன பரிபாலன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை, பௌத்த விவகாரங்கள் அமைச்சு என்பன தமிழர் தாயகத்தில் மேற்கொள்கின்ற ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பாக சிங்கள தேசத்துக்கும் தமிழ்த்தேசத்திற்கும் இடையே சமூக ஒப்பந்தம் ஒன்று கைச்



சாத்திடப்படல் வேண்டும். அதில் தமிழ் தேசஅங்கீகாரம், இறைமைஅங்கீகாரம், சுயநிர்ணய அங்கீகாரம், சுயநிர்ணய சமஷ்டி என்பன ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதற்கான அரசியல் யாப்புச்சட்ட வடிவம் ஆறு மாதங்களுக்குள் உருவாக்கப்படல் வேண்டும்.

அரசியல் தீர்வு வரும் வரை இடைக்கால நிர்வாகம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அந்த நிர்வாகத்துக்கு காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் உட்பட தமிழ் மக்களின் விவகாரங்களை கவனிப்பதற்கான சுயமான அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியம் இந்த மூன்று செயல் திட்டங்களுக்குமான ஒப்புதல் சர்வதேச நடுவர்கள் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும்.

இந்த செயல் திட்டங்களை எதிர்க்கட்சிகள் தரப்பு ஏற்காவிட்டால் சர்வகட்சி அரசாங்க முயற்சிகளுக்கு தமிழ்த் தரப்பு எந்த பங்களிப்புகளையும் வழங்கக் கூடாது. அந்த முயற்சிகளில் இருந்து முழுமையாக வெளியேற வேண்டும். இதனை மீறி தமிழ்த் தேசியக் கட்சிகள் செயற்படுமாக இருந்தால் அவர்கள் முழுமையாக மக்கள் முன் அம்பலப் படுத்தப்படுவர்.

அடுத்த விடயம் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் போராட்டம் ஒரு ஆட்சி மாற்றத்துக்கான போராட்டம். புதிய ஆட்சி தமிழ் மக்களின் நலன்களைப் பேணும் என்ற உத்தரவாதத்தை சிங்கள எதிர்க் கட்சிகளும், ‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்களும் தராத நிலையில் தமிழ் மக்கள் இந்த முன்னெடுப்புக்களில் பங்கு பற்றக் கூடாது. இதற்கான தூண்டுதல்களை தமிழ்த்தேசியக்கட்சிகளோ, பொது அமைப்புகளோ, கொடுக்கக் கூடாது. தமிழ்த்தேசியக்கட்சிகளையும் தமிழ்ப் பொது அமைப்புக்களையும் இது விடயத்தில் அவதானமாக இருக்குமாறு வேண்டுகின்றோம்.

# எம் - பேமெண்ட் (M.Payment) நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நுட்பியல் அவத்தை, மக்களின் அன்றாட வாழ்க்கையை மாற்றிய புரட்சியின் முதல் தலைமுறை ஸ்மார்ட்போன்களினால் சாத்தியமாகியிருக்கிறது. அதன்வழி அடுத்தபுரட்சியாக மொபைல் கொடுப்பனவுகளின் உலகளாவிய அதிகரிப்பைக் குறிப்பிடலாம். மொபைல்கொடுப்பனவுஉலகச்சந்தைநடைமுறையை மாற்றியமைப்பதோடு நுகர்வுப்பண்பாட்டையும் பாரியளவில் மாற்றிவருகின்றது. அல்லது எம் – பேமெண்ட் (M.Payment) என்று இது கருதப்படுகின்றது. மொபைல் சாதனம் மூலம் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு ஈடாக நிதி மதிப்பு பரிமாற்றத்தைத் தொடங்க, அங்கீகரிக்க மற்றும் உறுதிப்படுத்த மொபைல் சாதனம் மூலமாக பயன்படுத்தப்படும் எந்தவொரு கட்டணமும் இதற்குள் அடங்கும்.

டிஜிற்றல் பணப்பை என்று அழைக்கப்படும் மொபைல் பணப்பரிமாற்ற நடைமுறை உலகம் முழுவதும் அதிக அளவில் பரவி வருகின்றது. உலகச் சந்தை, குறிப்பாக சீனா மற்றும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில், பாரியளவில் மிகவேகமாக பரவிவருகின்றது. ஆனால், ஆச்சரியமான விடயம் என்னவென்றால் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் மொபைல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வது ஒப்பீட்டளவில் சீனா, இந்தியா போன்ற வளரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது மெதுவாகவே உள்ளது, ஆனால் அங்கும் சீராக அதிகரித்து வருகிறது எனலாம்.

இப்போதெல்லாம் ஸ்மார்ட் போன் மூலம் அனைத்தையும் செய்யலாம். நீங்கள் ரைப்பிங் செய்யலாம், உலாவலாம், ஆராய்ச்சி செய்யலாம், அதே வேளை ஸ்மார்ட்போன் இப்போது பணம் செலுத்துவதற்கான விருப்பமான முறையாகவும் உள்ளது. மொபைல் பணப்பரிவத்தனை பணம் செலுத்துவதற்கான மிகவும் பிரபலமான வழிகளில் ஒன்றாக மாறி வருகின்றன. ஏனெனில், அவை வசதியானவை, வேகமானவை மற்றும் பாதுகாப்பானவை.

மொபைல் பணப்பரிமாற்றம் என்பது ஸ்மார்ட் போன் அல்லது டேப்லெட்டைப் பயன்படுத்தி செய்யப்படும் பரிமாற்றமாகும். டிஜிற்றல் வங்கிகள் புதுமையான செயலிகளை அறிமுகப்படுத்தி புதிய தொழில்நுட்பத்துடன் மொபைல் பரிமாற்றங்களை பிரபலப்படுத்தியுள்ளன.

மொபைல் பணப்பரிமாற்றம் பல வழிகளில் செயற்படுத்தப்படுகின்றது.

**1. பார்கோடு பரிமாற்றங்கள்**

உடனடியாகப் பணத்தை அனுப்ப திரையில் அல்லது நேரில் பார்கோடை ஸ்கேன் செய்து பணப்பரிமாற்றம் செய்யப்படுகிறது.

**2. மொபைல் வங்கி பரிமாற்றங்கள்**

இதில் ஒரு வங்கிக் கணக்கிலிருந்து மற்றொரு வங்கிக் கணக்கிற்கு நேரடியாகப் பணத்தை அனுப்ப டிஜிற்றல் நுட்பியல் உதவுகிறது. பணம் பெறுபவரின் வங்கி விவரங்கள் மட்டுமே தேவை. இங்கு, பணம் செலுத்துபவரும், பணம் பெறுபவரும் ஒரே வங்கியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**3. ஆப் - டு - ஆப் இடமாற்றங்கள்**

செயலியிலிருந்து செயலிக்கான பணப்பரிமாற்றம் நடைபெறும். பேபால் (paypal) போன்ற கட்டணச் செயலிகள் அடங்கும். பணத்தை மாற்றுவதற்கு இரு தரப்பினரும் ஆப்ஸை வைத்திருக்க வேண்டும் அல்லது இணையப் பதிப்பைப் பயன்படுத்த வேண்டும்.

**4. தொடர்பு இல்லாத கட்டணங்கள்**

டிஜிற்றல் டெபிட் கார்டு மூலம் பணம் செலுத்தும் முறை இதற்குள் அடங்கும்.


நாம் அனைவரும் விரைவாக பணம் பெற விரும்புகிறோம். மொபைல் பணப்பரிமாற்றம் நிகழ்நேரத்தில் பணத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாகும். இங்கு, பயன்படுத்தும் பயன்பாட்டைப் பொறுத்து, சில நொடிகளில் பணம் கிடைத்துவிடும். பணம் செலுத்தப்பட்டவுடன் உடனடி அறிவிப்பு மற்றும் பற்றுச்சீட்டை பெற முடியும் என்பதால் வாடிக்கையாளர் மிகவும் நிம்மதியாக இருப்பார்கள். இந்த நுட்பியல் அவத்தையில் எடுத்துச் செல்ல பணப்பை தேவையில்லை, பணம் திருடுட்டுப்போவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. பாதுகாப்பு காரணங்களுக்காக பலர் தங்கள் ஸ்மார்ட் போன்களுடன் பணம் செலுத்த விரும்புகிறார்கள்.



மொபைல் பணிப்பரிமாற்றத்திற்காக பயன்படுத்தப்படும் நுட்பியல் அவத்தை NFC (Near-Field Communication) என்பதாகும். நுகர்வோர் மற்றும் வணிகங்களை தொடர்பு இல்லாத கட்டணங்களைச் செய்ய உதவும் தொழில்நுட்பமாகும். ஆப்பிள் மற்றும் கூகுள் பே போன்ற பயன்பாடுகளுக்கான ஸ்மார்ட் போன்களிலும் NFC தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது, அருகாமையில் உள்ள ரேடியோ அலைவரிசை அடையாளத்தைப் பயன்படுத்தி, கட்டணத் தரவு விபரம் 'கார்டு ரீடருக்கு' அனுப்பப்படுகிறது, மேலும் நுகர்வோர் கடவுக்குறியீடு அல்லது கைரேகை மூலம் தங்கள் அடையாளத்தைச் சரிபார்த்தவுடன், கணக்கிலிருந்து பணம் மாற்றப்படும்.

மொபைல் பணப்பரிமாற்றம் உண்மையில் பாதுகாப்பானதா? என்ற கேள்வி உண்டு எனலாம்.

ஹேக்கர்கள்தொடர்ந்துதொழில்நுட்பபாதுகாப்பைச் சுற்றி புதிய வழிகளைக் கண்டுபிடித்து வருகின்றனர், அவர்களால் எப்போதும் ஆபத்து உண்டு.




அதனைவிட மொபைல் பணப்பரிமாற்றத்திற்கு பல பாதுகாப்பு பிரச்சினைகளும் சுட்டிக்காட்டப்படுகின்றன. குறிப்பாக, பெரும்பாலானவர்கள் தங்கள் மொபைல் போனை எல்லாவற்றுக்கும் உயிர்நாடியாகப் பயன்படுத்துகிறார்கள். அவை பணப்பைகள், வணிக அட்டைகள், ஜிபிஎஸ் மற்றும் சமீபத்தில் கிரெடிட் கார்டு ஸ்கேனர்கள் மற்றும் வங்கி விவரங்கள் போன்றன சேமிக்கப்படுகின்றன. இவை அனைத்திற்கும் பயனர் கடவுச்சொற்கள், தனிப்பட்ட தகவல்கள், இருப்பிடம் மற்றும் சாதனத்தில் சேமிக்கப்பட்டுள்ள வங்கி விவரங்கள் போன்ற சில முக்கியமான தரவுகள் பதியப்படுகின்றன. ஆகவே மொபைல் போன் தொலைந்துவிட்டது என்று வைத்துக் கொண்டால் மொபைல் பணப்பரிமாற்றத்திற்கு பாதுகாப்பில்லை என்ற நிலை உருவாகும். இந்த நிலையில் எப்படி பாதுகாக்க வேண்டும். ஹேக்கர் அல்லது திருடன் உங்கள் மொபைல் பணப்பரிமாற்றத்தை அணுகுவதைத் தடுக்கும் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தை ஸ்மார்ட்போன் விற்பனையாளர்கள் தொடர்ந்து அறிமுகப்படுத்துகின்றனர். இரண்டு காரணி அங்கீகாரத்திற்கு உங்கள் சாதனத்தைத் திறக்க இரண்டு வகையான அடையாளங்கள் தேவை. இது பொதுவாக கைரேகை அல்லது முக அங்கீகாரம் மற்றும் PIN எண்ணின் போன்றனவாகும். இந்தத் தகவல்களை பார்க்க முடியாதவாறு செய்யமுடியும்.

இதே போல் பலவீனமான கடவுச்சொற்கள் அல்லது அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட கடவுச்சொற்கள் காரணமாக பாதுகாப்பற்ற நிலைமை காணப்படும். இதனால் ஹேக்கிங் செய்ய வாய்ப்புள்ளது. இதிலிருந்து தப்புவதற்கு எல்லாவற்றுக்கும் ஒரே கடவுச்சொல்லைப் பயன்படுத்தக் கூடாது. மாதத்திற்கு ஒருமுறை அவற்றை மாற்ற முயற்சிக்கலாம். கடவுச்சொல் நிர்வாகியைப் பயன்படுத்துவதை மேற்கொள்ளலாம். இந்த ஒன்லைன் கடவுச்சொல் ஆதாரங்கள் எண்கள், எழுத்துக்கள் மற்றும் சிறப்பு எழுத்துக்களின் கலவையைப் பயன்படுத்தி வலுவான கடவுச்சொற்களை உருவாக்கும், மேலும் அவை அனைத்தையும் மறைகுறியாக்கப்பட்ட பெட்டகத்தில் சேமிக்கும்.

பொது வைபை பயன்படுத்துவதால் பாதுகாப்பற்ற நிலை உருவாகிறது. போலி இணைப்புகளை உருவாக்குதல் மற்றும் சைட்ஜாக்கிங் (வயர்லெஸ் பொது நெட்வொர்க்குகள் மூலம் ஒரு வலைத்தளத்திற்கான பயனரின் அணுகலை திருடுதல்) மூலம் ஹேக்கர்கள் பொது வைபையைப் பயன்படுத்தி அணுகல் புள்ளியை (AP) அமைப்பதன் மூலம் போலி இணைப்புகள் உருவாக்கப்படுகின்றன, இது இணைய அணுகலுடன் வங்கிப் பரிமாற்றம் அல்லது ஒன்லைன் கட்டணம் போன்ற பரிமாற்றத்தில் உள்ள எந்தத் தரவையும் ஹேக்கர்கள் இடைமறிக்கமுடியும். இதற்காக பொது வைபையை பயன்படுத்தும்போது VPN (Virtual Private Network) ஐப் பயன்படுத்துவது ஹேக்கிங்கிற்கு எதிரான பாதுகாப்பின் மிகவும் பாதுகாப்பான வடிவங்களில் ஒன்றாகும்.

மேலும் மனித தவறு அல்லது கவனக்குறைவு பல சூழ்நிலைகளில் மொபைல் பணப்பரிமாற்றத்தில் பாதுகாப்பு மீறல்களுக்கு முதலிடத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தரவு மீறல்கள் ஊழியர்களின் தவறுகளால் ஏற்படுகிறது. பாதுகாப்பற்ற இணைப்புகளைக் கிளிக் செய்தல், பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கொண்ட மின்னஞ்சல்களைத் திறத்தல் மற்றும் தேவையற்ற மென்பொருளைத் தற்செயலாகப் பதிவிறக்குதல் போன்ற தருணங்களுக்காக, இவ்வாறான மனிதப்பிழைகளுக்காக ஹேக்கர்கள் காத்திருக்கிறார்கள். அதற்கான வாய்ப்பை கொடுக்காது தவிர்த்தல் வேண்டும்.

தெரியாத அனுப்புநர்கள் அல்லது ஆதாரங்களில் இருந்து வரும் மின்னஞ்சல்களில் உள்ள எந்த இணைப்புகளையும் கிளிக் செய்யக்கூடாது. கடவுச்சொற்கள் மற்றும் அவற்றை எவ்வாறு சேமிப்பது என்பதில் விழிப்புடன் இருக்க வேண்டும். உங்கள் சொந்த வைபையைப் பயன்படுத்தி கார்டுகளை வீட்டிலேயே பயன்படுத்துவது, பணியிடத்தில் அல்லது பொது இடங்களில் இதைச் செய்வதை தவிர்ப்பது பாதுகாப்பானது.

மொபைல் பணப்பரிமாற்றத்தில் வணிகங்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் பாதுகாப்பு கவலைகள் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும்கூட, சரியான கல்வி மற்றும் முறையான பயிற்சி மூலம் மொபைல்கட்டணங்களின் வியத்தகு பயனை அடைய முடியும்.